**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**அ.வ.எண். 81/2021**

வாதி தரப்பு 1 வது சாட்சி ராஜேந்திரன் என்பவரின் வாக்குமூலம் ( 1869 ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது பிரிவு 6 வது விதியின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜேந்திரன் | சாதி | : | |
| தகப்பனார் பெயர் | : | ராமசந்திரன் | சமயம் | : | இந்து |
| கிராமம் | : | அருப்புக்கோட்டை | தொழில் | : | அரசு அலுலவர் (பணி ஓய்வு) |
| தாலுகா | : | அருப்புக்கோட்டை | வயது | : | 65 |

நாள் : 01.12.2025.

வா.சா.1 – ராஜேந்திரன்

**முதல் விசாரணை :–**

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். எனது தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதனை தரப்பு சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

**(பிரதிவாதியோ, அவர் தரப்பு வழக்கறிஞரோ ஆஜராகாத காரணத்தினாலும், வாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்கவும் ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)**

இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி
அருப்புக்கோட்டை.